# அம்பலான்கொடை பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, அம்பலான்கொடை பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பலான்கொடை பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பாக தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 11,439,056 தொகையானது சகல நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாமல் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே கட்டிடம் துருப்பிடித்துக் காணப்பட்டதுடன் அதனை நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 காணி ஏல விற்பனை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமை

சபை அதிகாரப் பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட 14 காணி ஏல விற்பனைக்காக இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்படாதிருந்தமை 2013 மார்ச் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டு சபைக்கு பெறப்பட வேண்டியிருந்த ரூபா 215,000 தொகையான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

அவ்வாறே நாளொன்றிற்கு ரூபா 50 படி ரூபா 167,850 தொகையான தண்டப்பண வருமானத்தையும் சபை இழந்திருந்தது.

(ஆ) வரி அறவிடப்படாமை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேச்தில் ஏதாவது காணி ஏலவிற்பனை செய்யப்படுமாயின் அந்தக் காணி விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தில் 1 சதவீத வரி விற்பனையாளரிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட 10 காணி ஏல விற்பனைகளில் உள்ளபடியான விற்பனைப் பெறுமதியில் 1 சதவீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அண்ணளவான மதிப்பீட்டின் அடிப்படையில் வரித் தொகை அறவிடப்பட்டமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே அதிகாரச் சட்டத்தின் 154(2) இன் பிரகாரம் செலுத்த வேண்டிய வரி கோரப்பட்டு பதினான்கு நாட்களுக்குள் செலுத்தாதுவிடின் நீதிமன்றத்திற்கு அறிவித்து வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட

வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவனத்தில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. 2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பீஈ/எப்/எஸ்/4(xiii) ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்